IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 133/2013 Date: 21.02.2024

DW1-ஜெயவேல்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்களும் இன்ன பிற சொத்துக்களும் வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதியும் மற்றவர்களும் 16.02.1983ல் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் படி தான் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தும் பிற சொத்துகளும் பாகம் பிரிந்தது என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்துக்களை அவருடன் வாதிகளும் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி அந்த சொத்துக்களை கூட்டாக விற்பனையும் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ன் படி ஒரு செங்கோட கவுண்டர் மகன் சண்முகத்திற்கு சொத்தை வாதிகளும், 1ம் பிரதிவாதியின், அவர்களது தாயாரும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அன்றைய தினமே 1ம் பிரதிவாதியின் பெயரில் வாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அந்த கிரைய தேதியில் வாதிகளும், 1ம் பிரதிவாதியும் ஒரே குடும்பமாக வசித்தார்கள் என்றால் சரிதான். நானும், என் மனைவியும் 1ம் பிரதிவாதியிடம் இருந்து தான் கிரையம் வாங்கினேன் என்றாலும், வாதியின் பொது அதிகாரம் பெற்றவர்களிடம் வாங்கவில்லை என்றாலும் சரிதான். அதனால் தாவா சொத்தில் 1/3 பாகம் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கிரையம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அந்த சொத்தை 1ம் பிரதிவாதி மட்டும் தனியாக விற்பனை செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளின் தாயார் ஜெயலட்சுமிக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

Sd/-ஜெயவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி